# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.193/2018** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **பி.வா.சா- 01 ( DW- 01 )** |
| **பெயர்** | :- | **சாந்தா க/பெ.சிவக்குமார்** |
| **தேதி** | :- | **13-03-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

இந்த வழக்கில் நான் எனக்காகவும் மற்ற பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் ஆசிரியர் பயிற்சி வகுப்பு படித்திருக்கிறேன். எனக்கு குடும்ப அட்டை வாழப்பாடி ஊர் முகவரில் உள்ளது. என் தகப்பனார் எனக்கும் என் சகோதரிகளுக்கும் தனிதனியாக ஆளுக்கு ஒரு வீடு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். முத்துநாய்கன்பட்டி ஊரில் ஆசாரி தெருவில் 1425 சதுரடி வீட்டு மனையும் அதில் உள்ள ஓட்டு வீட்டையும் விருப்பாவணம் மூலம் எனக்கு கொடுத்தார். 2015-ஆம் ஆண்டு எனக்கு விருப்பாவணம் எழுதி வைத்தார்.

வாதி எதற்காக எங்கள்மீது வழக்கு தொடுத்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். வாதிக்கு எழுதி வைத்த அறுதியாவணத்தை என் தகப்பனார் இரத்து செய்தது செல்லாது என்று கோரி வாதி இந்த வழக்கை தொடுத்துள்ளார். அறுதியாவணத்தை இரத்து செய்து என் தகப்பனார் எழுதிய பத்திரத்தில் வீடு, கட்டடங்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. இரத்து பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களில் 03 மாடி

கட்டடம் உள்ளது என்றால் சரிதான். அந்த கட்டடத்திற்கான மின் இணைப்பும் வீட்டு வரி இரசீதும் வாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த கட்டடத்தில் உள்ள கடைகள் வாடகைக்கு விடப்பட்டு வாடகை பணத்தை வாதி வசூலிக்கிறார் என்றால் சரிதான்.

வாதிக்கு என் தகப்பனார் எழுதி வைத்த அறுதியாவணத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தில் காலி இடம்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் நலச்சார்பாக இருந்த அறுதியாவணத்தை நான் படித்துப் பாத்திருக்கிறேன். அதில் எக்காலத்திலும் எக்காரணத்திற்காகவும் அந்த அறுதியாவணத்தை இரத்து செய்ய மாட்டேன் என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான்.

என் தகப்பனாரின் பெருங்குடலை நறுக்கி சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். 2010-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் உள்ள ஜெம் மருத்துவமனையில் அந்த சிகிச்சை அளிக்கப்பட்டது. என் தகப்பனார் இறக்கும்வரை குடல் பிரச்சனைக்காக அவ்வபோது வெவ்வேறு மருத்துவ -மனைகளுக்கு சென்று வைத்தியம் பார்த்தார் என்றால் சரிதான். 2012-ஆம் ஆண்டு சேலம் புதிய பேருந்து நிலைய பகுதியில் உள்ள SKS மருத்துவமனையிலும் 2014-ஆம் ஆண்டு சேலம் நான்கு சாலை பகுதியில் உள்ள நிதீஸ் மருத்துவமனையிலும் 2015-ஆம் ஆண்டு சேலம் ராமகிருஷ்ணா சாலையில் உள்ள சண்முகம் மருத்துவமனையிலும் சேலம் காந்தி சாலையில் உள்ள அப்புசாமி மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றார்.

2012-ஆம் அண்டிற்குபிறகு என் தகப்பனார் எந்த வகையிலும் வருவாய் ஈட்டாமல் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாருக்கு அடிக்கடி நினைவாற்றல் குறைந்தது என்றும் அதற்காகதான் அப்புசாமி மருத்துவமனையில் நரம்பியல் மருத்துவர் ஈஸ்வர் தாஸ் என்பவரிடம் சிகிச்சை பெற்றார் என்றால் இல்லை. மருத்துவர் ஈஸ்வர் தாஸிடம் என் தகப்பனார் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். நாள்பட்ட நீரிழிவு நோய்க்காகவும் அவ்வபோது ஏற்படும் கழுத்து வலி, கைகள் வலிக் காகவும் மருத்துவர் ஈஸ்வர் தாஸிடம் என் தகப்பனார் சிகிச்சை பெற்றார்.

என் தகப்பனாருக்கு எந்தெந்த மருத்துவமனையில் என்ன காரணத்திற்காக சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற விவரமும் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் செலுத்தப்பட்ட கட்டணங்கள் சம்மந்தமான விவரமும் வாதிக்குதான் தெரியும் என்றால் சரியல்ல. நாங்கள்தான் செலவு செய்தோம். என் தகப்பனாருக்கு சிகிச்சை அளித்தது சம்மந்தமான ஆவணங்கள் எதையும் நான் இந்த வழக்கு நடவடிக்கையில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான்.

என் கணவர் Auto வாகனம் ஒட்டுகிறார் என்றால் சரிதான். என் திருமணத்திற்கு என் தகப்பனார் சீர் வரிசையாக நகை எதுவும் கொடுக்க -வில்லை. என் சகோதரிகளுக்கும் கொடுக்கவில்லை. எனக்கு எத்தனை வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் பல்லவன் கிராம வங்கியில் மட்டும் கணக்கு உள்ளது. என் தகப்பனார் துணி வணிகம் செய்த கடையை வாதி தற்போது நடத்திவருகிறார் என்றால் இல்லை. வாதி துணி கடை நடத்துகிறாரா என்றால் தற்போது அவர் தனியாக துணி கடை வைத்து நடத்தலாம்.

என் தகப்பனாரின் மருத்துவ செலவிற்கு மொத்தம் எவ்வளவு செலவு ஆகியிருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. என் தகப்பனார் இறந்ததற்கு வாதி இறுதி சடங்கு செய்தாரா என்றால் சடங்கு மட்டும் செய்தார். நாங்கள்-தான் செலவு செய்தோம். என் தகப்பனார் அறுதியாவணம் எழுதியபோது அந்த இடத்தில் கட்டடம் இருந்ததா என்றால் இருந்தது. அந்த இடத்தில் எப்போது கட்டடம் கட்டப்பட்டது என்று எனக்குத் தெரியுமா என்றால் 2012-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. என் தகப்பனார்தான் அதை கட்டினார். அதை கட்டியதாக அவர்தான் என்னிடம் சொன்னார். என் தகப்பனார் கட்டடம் கட்டியபோது நான் வாழப்பாடியில் இருந்தேன். முத்துநாய்கன்பட்டி ஊரில் எவ்வளவு ஆண்டுகளாக நான் வசிக்கிறேன் என்றால் சுமார் 07 அல்லது 08 ஆண்டுகள் இருக்கும்.

அறுதியாவண இரத்து பத்திரத்தில் யார் யார் சான்றொப்பம் இட்டது என்றால் நான், நான் வசிக்கும் இடத்திற்கு அருகில் அருள் என்பவர். அந்த சொத்தின் மூல பத்திரங்கள் வாதியிடம் உள்ளன. இரத்து பத்திரம் பதிவு-செய்யப்பட்டபோது என் சகோதரிகள் அனைவரும் பதிவு அலுவலகத்திற்கு வந்திருந்தனாரா என்றால் இல்லை. ஆனால் அவர்களுக்கு அதுப் பற்றி தெரியும்.

அறுதியாவணத்தை இரத்துசெய்ய வேண்டும் என்று என் தகப்பனார் முதன் முதலில் யாரிடம் சொன்னார் என்றால் வாதியிடம்தான் சொன்னார். இரத்து பத்திரத்தை எழுதி பதிவுசெய்யப்போவதாக எப்போது வாதியிடம் என் தகப்பனார் சொன்னார் என்றால் அந்த பத்திரம் பதிவுசெய்யப்பட்ட நாளுக்கு 03 மாதங்களுக்குமுன் சொன்னார். அவ்வாறு சொன்ன சமயத்தில் வாதியும் என் தகப்பனாரும் ஒரே குடும்பமாக சுமூக உறவில் இருந்தனரா

என்றால் ஒரே குடும்பமாகவும் இல்லை. சமூக உறவிலும் இல்லை. என் தகப்பனார் இறப்பதற்குமுன் எவ்வளவு நாட்கள் படுத்தபடுக்கையாக இருந்தார் என்றால் சுமார் 45 நாட்கள் இருக்கும். என் தகப்பனாருக்கும் வாதிக்கும் ஒரே குடும்ப அட்டை இருந்ததா என்றால் இல்லை. தனிதனி குடும்ப அட்டைகள் இருந்தன. அறுதியாவண இரத்து பத்திரம் எழுதிய பிறகுதான் எங்களுக்கு விருப்பாவணங்கள் எழுதினார். அறுதியாவண இரத்து பத்திரம் என்னிடம் உள்ளது. அந்த ஆவணத்தில் உள்ள நிறைவேற்றுநர் கையொப்பம் என் தகப்பனாரின் கையொப்பம் இல்லை என்றும் அதனால்தான் அந்த ஆவணத்தை நான் இந்த வழக்கு நடவடிக்கை -களில் சான்றாவணமாக தாக்கல்செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

வாதிக்கு என் தகப்பனார் எந்தெந்த ஆவணங்கள் மூலம் சொத்துக்களை கொடுத்துள்ளார் என்று எனக்குத் தெரியுமா என்றால் ஆவண விவரம் தெரியாது. எந்தெந்த சொத்துக்களை கொடுத்தார் என்று தெரியும். என் பெற்றோர் எவ்வளவு நகைகள், பணம் வைத்திருந்தனர் என்றால் சுமார் 01 கிலோ பவுன் நகைகளும் 50 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக பணமும் வைத்திருந்தனர். இந்த விவரத்தை நான் தற்போதுதான் முதன் முதலில் கூறுகிறேன் என்றும் வேறு எங்கும் கூறவில்லை என்றும் சொன்னால் சரிதான். மேற்சொன்ன நகை, பணத்தை வாதி எடுத்துசென்றதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. என் தாயார் பார்த்ததாக என்னிடம் சொன்னார். மேற்சொன்ன பணத்தையும் நகையையும் அறுதியாவணம் எழுதியதற்கு பிறகு வாதி எடுத்துச் சென்றார்.

அறுதியாவணத்திற்கு பிறகு அதில் கண்ட சொத்தை பொறுத்து வாதியின் பெயரில் வருவாய் துறை உள்ளிட்ட ஆவணங்களில் வாதியின் பெயர் பதிவுசெய்யப்பட்ட நிலையில் இரத்து பத்திரத்திற்கு பிறகு மேற்சொன்ன பதிவுகளை நீக்க நாங்கள் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. அறுதியாவணம் இரத்தாகிவிட்டது என்றும் எங்களுக்கும் பங்கு வேண்டும் என்றும் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்தோமா என்றால் எடுத்தோம்.

10.12.2015-ஆம் தேதியன்று நாங்கள் அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பை என் தாயாருக்கும் எதிராகதான் அனுப்பினோம் என்றால் இல்லை. வா.சா.ஆ-05 ல் என் தாயாரின் பெயரும் உள்ளது என்றால் சரிதான். ஆனால் என் தாயார் எங்களுடன்தான் உள்ளார். அந்த அறிவிப்பிலேயே என் தாயாரும் வாதியும் ஒரே வீட்டில் வசிப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அறிவிப்பு அனுப்பிய பிறகு நாங்கள் பாகப்பிரிவினை கோரி தனியாக வழக்கு எதுவும் தொடுக்க-வில்லை.

என் பெற்றோர் எங்களுக்கு போதுமான சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து கொடுத்ததால்தான் பாகம் கேட்காமல் இருக்கிறோம் என்றால் சரியல்ல. எனக்கும் என் சகோதரிகளுக்கும் ஒரே நாளில் திருமணம் நடந்ததா என்றால் இல்லை. ஒவ்வொருவருக்கும் திருமணம் நடந்தபோது பங்கு கொடுக்கிறேன் என்று அவ்வப்போது சொன்னாரா என்றால் இல்லை. கடைசியாக சொன்னார்.

என் தகப்பனார் என் சகோதரிகளுக்காக எத்தனை அறுதியாவணங்கள் எழுதிக்கொடுத்தார் என்றால் உமாராணிக்கு மட்டும் அறுதியாவணம் எழுதி வைத்துள்ளார். எந்த ஆண்டு என்று எனக்கு நினைவில்லை. என் தகப்பனார் எத்தனை விருப்பாவணங்கள் எழுதி உள்ளார் என்றால் இரண்டு. இரண்டும் பதிவுசெய்யப்பட்டவை. எனக்கும் கலாவிற்கும் எழுதி வைத்துள்ளார். வாதிக்கு அறுதியாவணம் எழுதிக் கொடுப்பதற்குமுன் உமாராணிக்கு அறுதியாவணம் எழுதி வைத்தார். வாதிக்கு அறுதியாவணம் எழுதி வைத்த பிறகு எங்களுக்கு விருப்பாவணம் எழுதி வைத்தார். விருப்பாவணங்களை அடிப்படையாக கொண்டு அந்த சொத்துக்களை பொறுத்து வருவாய் துறை உள்ளிட்ட ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

என் தகப்பனாரின் மருத்துவ செலவிற்கு எந்தெந்த சகோதரிகள் எவ்வளவு பணம் கொடுத்தனர் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் தனிதனியாக சொல்ல முடியாது. என் தகப்பனாருக்கு மருத்துவத்திற்கான செலவுகள் அனைத்தையும் வாதிதான் செய்தார் என்றால் இல்லை. என் அவசர செலவிற்காக என் தகப்பனாரிடம் இருந்து நான் 50 சவரன் பவுன் நகைகளை வாங்கிச் சென்றேன் என்றால் இல்லை. என் சகோதரிகள் என் தகப்பனாரிடம் எவ்வளவு பணம் வாங்கினார், எவ்வளவு நகை வாங்கினார் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

என் தகப்பனார் அறுதியாவண இரத்து பத்திரம் நிறைவேற்றி பதிவு-செய்தார் என்று நான் சொல்வது பொய் என்றும் அந்த இரத்து பத்திரம் பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல. சித்ராவிற்கு மட்டும் என் தகப்பனார் தனியாக ஆவண மூலம் சொத்து எதுவும் கொடுக்கவில்லை.

எனக்கும் சித்ராவிற்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். சித்ராவிற்கும் சேர்த்து நான் சாட்சி சொல்வதாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

வழக்குரையில் கோரியுள்ளபடி நிவாரணம் பெறுவதற்கு வாதிக்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.